**வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களை நிறுவுவதற்கான செயற்திட்டம் - 2016**

வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களை நிறுவுவதற்கான செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 மார்ச் 26 ஆந் திகதிய 7/477 ஆம் இலக்க மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 11/640 ஆம் இலக்க உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சான தற்போதைய சுகாதாரம் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. கொழும்பிலுள்ள பொது வைத்தியசாலை இடங்களில் முழுமையான உபகரண வசதியுடன் வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் மாகாண சுகாதார நிலையத்தை நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், ஆரம்பத்தில் ரூபா 2,273 மில்லியனிற்கு சமமான சவுதி றியால் 75 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2015 ஒக்தோபர் 30 இல் குறைநிரப்பு கடன் உடன்படிக்கையினூடாக ரூபா 1,690.65 மில்லியனிற்கு சமமான சவுதி றியால் 45 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 மார்ச் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை 05 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எஸ்எவ்டி | 120.00 | 3,963.65 | 1,640 | 31.68 | 1,236.98 | 88.49 | 3,455.04 |
| இலங்கை அரசாங்கம் | 161.25 | 6,295.72 | 191 | - | 190.53 | - | 679.83 |
| **மொத்தம்** | **281.25** | **10,259.37** | **1,831** | **31.68** | **1,427.51** | **88.49** | **4,134.87** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவான நடைமுறையாக, பாதீட்டு மதிப்பீடுகளால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய 09 ஆண்டுகளின் பாதீட்டு மதிப்பீடுகளினூடாக ரூபா 6,453.82 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகளின் தாமதமான செயன்முன்னேற்றம் காரணமாக 2016 திசெம்பர் 31 வரை ரூபா 4,134.87 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதன் மூலமும் கடன் பெறுகைகளை வினைத்திறனாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதன் மூலமும் செயற்திட்ட நன்மைகளை அடைவதற்கு செயற்திட்ட குழுவானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கடன் தவணைக் கட்டணங்களை மீளச்செலுத்துவதற்கான மிகுதி 05 வருட காலப்பகுதி 2013 மார்ச் 26 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்த போதிலும் சவூதி றியால் 13 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் தவணைக் கட்டணங்கள் மற்றும் அதற்கான சவூதி றியால் 2.83 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டி 2016 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேலதிக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வைத்தியசாலை கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 969.80 மில்லியன் ஒதுக்கீடு கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், அதற்கான ஒப்பந்தம் ரூபா 1,793 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், வைத்தியசாலை கட்டிட நிர்மாண கிரயம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் விலை மாறுதல்களில் ரூபா 1,985.90 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ii) வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் மாகாண சுகாதார நிலையங்களுக்கான மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,075.90 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் செயற்திட்ட குறிக்கோள்களுடன் தொடர்பில்லாத தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் அதிர்வுப் பிரிவிற்கான மருத்துவ உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 337.26 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட மிகுதி ஒதுக்கீடு கட்டிடத்தின் கட்டிட நிரமாண வேலைகளின் மீதான கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கடனளிக்கும் முகவரினால் ஏனைய நோக்கங்களுக்காக ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்காக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேற்படி ஏற்பாடுகளின் விளைவாக, மருத்துவ உபகரணங்கள், தளபாடம், இயந்திரம், ஆலோசனை போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கும் மேலதிக கிரயங்களை ஈடுசெய்வதற்கும் செயற்திட்டத்தால் ரூபா 1,480 மில்லியன் தொகையான மேலதிக நிதி தேவைப்பாடு வேண்டப்பட்டிருந்தது.

(iii) மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் விளைவாக, வைத்தியசாலைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை கட்டணங்களாகவும் மருத்துவ உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காகவும் ஆரம்ப கட்டத்தில் இணங்கப்பட்ட ரூபா 164.05 மில்லியன் தொகை ரூபா 394.96 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 09 சுகாதார நிலையங்களின் நிர்மாணத்திற்கான ஆலோசனைக் கட்டணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் மேலதிக கிரயத்தை எதிர்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவிகள் ரூபா 1,074.88 மில்லியன் தொகையாகும்.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 ஏப்ரல் 03 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த வலிப்பு நோய் வைத்தியசாலையின் 08 தொடர்மாடி கட்டிடங்கள் 950 நாட்கள் காலதாமதத்துடன் 2016 நவம்பர் 09 இல் சுகாதாரம் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைத்தியசாலை 2017 ஒக்தோபர் 24 இல் திறக்கப்பட்டது.

(ஆ) ஆரம்ப கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நாடளாவிய ரீதியில் ரூபா 6,295.72 மில்லியனுக்குச் சமமான 161.25 மில்லியன் சவுதி றியால் கிரயத்தில் 09 மாகாண சுகாதார நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு செயற்திட்டம் பட்டியலிட்டிருந்தது. எனினும், வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுகள், ஆய்வு கூடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களுடன் பொருத்தப்பட்ட 09 சுகாதார நிலையங்களுக்கான கட்டிட நிர்மாணத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான கொடுக்கல்வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 133(1) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு உரிய அமைச்சால் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 ஆல் வேண்டப்பட்டவாறு ரூபா 1,231 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு ரூபா 803,346 பெறுமதியான கணனிகள், உபகரணங்கள் மற்றும் மென்பொருளிற்கான நிலையான சொத்து பதிவேட்டை செயற்திட்டம் பராமரித்திருக்கவில்லை. அதன் விளைவால், செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை கையளிப்பதற்கான செய்முறை ஒழுங்கான முறையில் அமுல்படுத்த முடியாதிருந்தது.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

பதிற்கடமை அடிப்படையில் கடமையாற்றுகின்ற செயற்திட்ட பணிப்பாளரை உள்ளடக்கிய செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் செயற்திட்ட நடவடிக்கைகளின் காலதாம செயன்முன்னேற்றத்தையும் அதிக கிரயத்தையும் கவனத்திற்கொள்ளாமல் தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டிருந்தது.